**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 301 /2019</u>**

பெயர் : சிங்காரவேலு P.W.3. Cross

த/பெ. : கோதண்டபாணி

தேதி : 29.01.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

1. எனது சொந்த ஊர் மேல சிங்கானோடை ஆகும். இந்த வழக்கு யார் யாருக்கு இடையே நடந்து வருகிறது என்றால் பாலகிருஷ்ணனுக்கும் சிவாஜிகணேசனுக்கும் இடையே நடந்து வருகிறது. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். எத்தனை அயிட்ட சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆனால், அவர்களுக்கு மணல்மேட்டிலும், சிங்கானோடையிலும் சொத்துகள் உள்ளன. மேற்படி கிராமங்களில் உள்ள சொத்துகள் எப்போது வாங்கபட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. தாவா சொத்துகள் வாங்குவதற்கு முன்பு வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் பெற்றோர் பெயரில் சொத்துகள் இருந்ததா என்றால் இருந்தது. எவ்வளவு சொத்துகள் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்களது பெயரில் இருந்து சொத்துகளிலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமுலத்தில் வாதியின் பெற்றோர் பெயரில் இருந்த சொத்துகளில் இருந்து வந்த வருமானத்தின் மூலம் தாவா சொத்துகள் வாங்கபட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் உழைத்து சம்பாதித்து கிடைத்த வருமாத்தின் மூலம் இந்த தாவா சொத்துகள் வாங்கப்ட்டன என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. வாதியின் பெற்றோர் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் 1ம் பிரதிவாதியின் பெயரில் சொத்துகளை வாங்கினார். சொத்துகள் வாங்கிய சமயத்தில் 1ம் பிரதிவாதி படித்து முடித்து வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி PUC வரை படித்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சுய சம்பாதியத்தின் மூலம் தான் தாவா சொத்துகள்

வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கூட்டு குடும்ப வருமாத்தை கொண்டு தாவா சொத்துகள் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. மாசிலாமணியின் மனைவி பெயரில் உள்ள சொத்துகள் இந்த வழக்கில் சேர்க்கபட்டுள்ளதா என்று தெரியுமா என்றால் தெரியாது.

4. வாதி சிவாஜி கணேசன் எனது நெறுங்கிய உறவினர் என்றால் சரிதான். வாதி எனது நெறுங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4. 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண், நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் எத்தனை புல எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி சிவாஜி கணசேன் எனக்கு அண்ணன் முறை ஆவார். 1ம் பிரதிவாதியின் பெயரில் என்ன ஆவணம் ஏற்பட்டது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் பெற்றோர் சம்பாதியத்தின் மூலம் வாங்கியதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணம் என்ன வகையான ஆவணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. இது வரை ஆவணங்கள் எதுவும் வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் என்னுடைய சாட்சி பொய்யானது என்றால் சரியல்ல.

2. 4ம் பிரதிவாதி தரங்கம்பாடி சார்பதிவாளர் பெயரில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் பொருண்மை எனக்கு தெரியவில்லை என்றாலும், வாதி எனக்கு உறவினர் என்பதால் அவரிடம் ஆதாயம் பெற்றுக்கொண்டு பொய் சாட்கியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.